வடக்கு கிழக்கு **யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டும்**

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலை 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 01 இதழ் 188
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17 — 08 — 1992

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)
யுத்தத்தினால் ஏற்படும் செலவினங்களின் பழு முழுச் சனத்தொகையினர் மீதும் சுமத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்காவில் உள்ள எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.
(4ம் பக்கம் பார்க்க)

## அரசு சர்வதிகார ஆட்சி நடத்துகிறது

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவும், ஐ. தே. க. அரசும் சர்வாதிகார ஆட்சி நடத்தி வருவதாக அரச அதிருப்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செலவுகளால் அதிகாரிகள் திணறல்!

(கொழும்பு)
சிறிலங்கா அரசின் எதிர்பாராத பாதுகாப்பு செலவினங்கள் காரணமாக தாம் ஏற்கனவே செய்த கணிப்பீடுகளின்படி தம்மால் செயற்படமுடியவில்லை என்று பெயர்
(4-ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அதிரடிகளை அடுத்து
# கிழக்கில் படையினரின் ரோந்து
# நடவடிக்கைகள் குறைப்பு!

(கொழும்பு)
கிழக்கிலங்கையில் விடுதலைப்புலிகள் தொடர்ந்து இராணுவத்தின் மீது பல தாக்குதல்களை நடத்தி வருவதால் இராணுவத்தினரின் பற்றுக்குறையை கவனத்தில் கொண்டு படையினர் ரோந்து நடவடிக்கைகளை குறைத்துக்கொள்ளப்போவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கிலங்கையில் இந்தப் புதிய நடைமுறையை உடனடியாக அமுல்படுத்தவும் அரசு உத்தேசித்துள்ளது.

மேலும் புதிய தாக்குதலை நடத்துவதைவிட, தமது நிலைகளை பலப்படுத்தி தற்காப்பு முயற்சியில் இறங்கவும் சிறிலங்கா ராணுவம் முடிவுசெய்துள்ளது.

இதேவேளையில் யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதல் திட்டங்கள் ஏற்கனவே தயாராகிவிட்டதாகவும் இத்தாக்குதல் உறுதியானதென்றும், ராணுவ உயர் அதிகாரிகள் பலியானதையடுத்து இத்தாக்குதல் சற்று தாமதமாகுவது இயற்கையேஎன்றும் ராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார். (கே)

### படையினர் பாதிப்பு

(கொழும்பு)
மேஜர் ஜெனரல் டென்சில் கொபம்பகடுவவினதும், பிரிகேடியர் விஜயவிமலரத்னவினதும் மற்றும் இராணுவ உயரதிகாரிகளின் உயிரிழப்பு வடபகுதியிலுள்ள படையினரை உளவியல் ரீதியாக மிகவும் பாதித்துள்ளதென கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார். (இ-சு)

## அமைச்சர் ரணில் பலாலி விஜயம்

(கொழும்பு)
கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூட்டுப்படைகள் தலைமையக தளபதி ஹமில்டன் வனசிங்க ஆகியோர் பலாலி, வவுனியா பகுதி
(4ம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட ராணுவநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறையில் அராலிச் சந்தியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலின் பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவலில் 23 தமிழர்கள்

(திருமலை)
திருமலை பாலையூற்றில் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட 23 தமிழர்களும் தொடர்ந்து தடுத்துவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலையில் கைதான 23 பேரில் நால்வர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவாகள் பற்றிய தகவல் எதுவும் உறவினர்களால் அறிந்துகொள்ளமுடியாமலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிது. (இ-ரி)

## அராலி சம்பவம் குறித்து படையினர் மத்தியில் கேள்விக்குறி

(கொழும்பு)
அராலித்துறையில் கடந்த 8-ந் திகதி இடம்பெற்ற அமுக்கக் கண்ணிவெடிச் சம்பவம் குறித்து படையினரின் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

குண்டு வெடிப்பு நிகழ்வதற்கு சற்று முன்னர் மேற்படி பாதையின் ஊடாக 20 தொன் நிறைவுடைய யுத்த டாங்கி கடந்துசென்றது. அது அமுக்கக் கண்ணி வெடியில் வெடிக்கவில்லை.

எனினும் மேஜர் ஜெனரல்
(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் துப்பாக்கிச் சூடு குடும்பப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை பகுதிக்குச் சென்று தாங்கள் விட்டுவந்த தளபாடப் பொருட்களை எடுத்துக்கொண்டிருந்தபோது நேற்றுக்காலை அப்பகுதியை நோக்கி இராணுவத்தினர் கடுமையாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டபோது இளம் குடும்பப்பெண் ஒருவா அவ்விடத்திலேயே பலியானார்.

தெல்லிப்பளை கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து அளவெட்டியில் வசித்துவரும் திருமதி புஸ்ப்பராணி அன்னலிங்கம் (34 வயது) என்பவரே பலியானவராவர். (இ:-56)

## கொப்பேகடுவ மரணத்தை அடுத்து கடைகளை மூடவேண்டாமென கொலைஞர் படை பணித்தது

(கொழும்பு)
மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் இராணுவ கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்
(4-ம் பக்கம் பார்க்க)

## படையினரின் மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)
அம்பனை மஹாஜனாக் கல்லூரிக்குப்பின்பாக உள்ள குடியிருப்புப் பகுதிக்குச் சென்று இன்னுமொருவருடைய வீட்டுப் பொருள்களை எடுத்துக்கொண்டு ஒழுங்கையினால் திரும்பிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிக்குள் அகப்பட்டு நேற்று வலது கால் பாதம் இழந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கட்டுவன் வறுத்தலை விழானிலிருந்து இடம் பெயர்ந்து அளவெட்டி குருக்கள் கிணத்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து கிரனேட் மாணவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
நேற்று முற்பகல் சில்லாலை பண்டத்தரிப்பு வழியாக பலாலி நோக்கிச்சென்ற ஹெலிகொப்டர் குடியிருப்புப் பகுதியை நோக்கி கிரனேட் தாக்குதலை மேற்கொண்டது.

இந்த கிரனேட் நல்லாயன் வீதியில் வீழ்ந்து வெடித்தபோது மாணவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த விக்டர்யூட் ஜெனிஸ்ரன் 15 வயது என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். (இ-56)

காடு அழியின் நாடு அழியும்

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ் ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களைதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல் லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### விண்ணப்பப் படிவம்

ஆங்கில ஆசிரியர் பதவிக் கான படிவம் எல்லாப் புத்த கக் கடைகளிலும் கிடைக் கும். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய் (சி. 6681)

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILLA Capsules கிடைக்குமிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (சி-6689)

### புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5)

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத்தரும் நிறு வனத்தால் வாரந்தோறும் நடாத்தப்படும் புலமைப் பரிசில் அடுத்த மாதிரிப் பரீட்சை 18-08-92 செவ்வாய் மு.ப. 7-00, பி.ப. 1 மணி நேரங்களில் நடைபெறும். வெளிமாணவரும் தோற்ற லாம். புதிய கல்வி நிலைய, 219, நாவலர் வீதி, யாழ்ப் பாணம், (சி- 6693)

## மட்டு. உரக்களஞ்சியம் மூடுவிழா
## வேளாண்மை பாதிப்பு

[மானிப்பாய்]

இலங்கை உரக்கூட்டுத் தாபனத்தின் மட்டக்களப்பு உரக் களஞ்சியம் மூடப்பட் டுள்ளது.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த இக் களஞ்சியம் தற்போது மூடப் பட்டுள்ளதால் இங்கு பணி புரிந்து வந்த 8 உத்தியோகத் தர்களும் தமது வேலையை இழக்கும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளனர். இக் களஞ் சியத்தில் இருந்த 100 தொன் பசளையும் கடந்த மே மாத இறுதியுடன் பொலநறுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மூடப்பட்ட இந்த உரக் களஞ்சியத்தின் மூலம் ஒரு போகத்திற்கு ஆயிரம் மெற் றிக் தொன் உரம் இங்குள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி
வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி, பி. ரஜீந்தி ரன் (நாதஸ்வரம்). கே. நித்தி யானந்தன், பி. முருகதாஸ், பி கணேசன், ஆர். பாஸ் கரன் (தவில்).


## தேடுதல் வேட்டை

[திருமலை]

திருகோணமலை நகரில் கட ந்த வாரம் சிறிலங்கா இரா ணுவத்தால் பெரும் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது

நகரின் முக்கிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட இத்தேடுதல் வேட்டையில் கைதுசெய்யப் பட்ட தமிழர்கள் அனைவரும் உள்துறைமுக வீதியில் முக மூடிகளின் முன்னால் நிறுத்தப் பட்டனர். (ரி)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திரு. சண்முகநாதன் வேலாயுதம்பிள்ளை

(முன்னாள் கிராமசேவை அலுவலர், அச்செழு)

தோற்றம்: 27 - 06 - 1932
மறைவு: 17 - 08 - 1989

திதி: 12 - 09 - 1992 பிரதமை

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

தங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, மக்கள், உறவினர்.

நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

(சி 6692)

# 180-வது நாள் நினைவலைகள்



## K.V.S. நாகலிங்கம்பிள்ளை

[சாமியார்]

தரணியில்: 07-12-1915
தனிமையில்: 20-02-1992

நூற்றெண்பது நாட்கள் – வெகு
நொடிதனில் சென்றதய்யா!
உங்கள் நினைவுகள் எம்மை – விட்டு
நீங்கவே இல்லையப்பா!
வீறு கொண்ட வேங்கைகள்
விளங்கும் நம் தீவகத்தில்
வேறு இடம் நாடுவது வீண் - என
பயந்தால் மக்கள் நீங்கள்
பகைவன் அந்த இராணுவம்
படை வந்து சூழு முன்
அனைவரும் போங்கள் – என
பாதி வழி வந்து எம்மை
பயணம் அனுப்பி வைத்தீர் - ஐயா!
வேப்பமரம் தடக்கியே - நீங்கள்
விழுந்திட்ட போதிலே
தூக்கியே உங்களை எடுப்பதற்கு – நாம்
காரதேசம் வந்து விட்டோம்
வேப்பமரம் யமனாக வரும் என்றால்
ஆறுபேரில் ஒருவர் நாம் – ஐயா
அசையாது இருந்திருப்போம்
இறுதியாக வந்த உங்கள்
இளைய மகள் நான் ஐயா!
இரங்கியே கேட்ட போதும்
இங்கிருப்பேன் நான்.
இருளு முன் போ மகளே
இனிமேல் தனிய வராதே – என
பகுவம் செய்தீர் ஐயா - இப்போ!
பதைக்கின்றேன் உங்கள் நினைவால்
ஐயாவை ஏன் விட்டீர் – என
அயலவர் கேட்கும் போது
நெருப்பிலே சிந்தும் அந்த
நெய்யாக உருகுகின்றேன்.

நா. தடாதகைப்பிராட்டி
(மகள்)
அரசினர் வைத்தியசாலை,
கோப்பாய்.

புனிதா பில்டிங்,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 6691)

## இராசி பலன்

17-08-1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு ஆவணி 1)

சதுர்த்தி மு. இ. 10-48 வரை, உத்தரட்டாதி மாலை 6-19 வரை, இராகு காலம் காலை 7-35 முதல் 9-05வரை, சுபநேரம் பகல் 12-05 முதல் 1-35 வரை, சித்தயோகம்.

மேடம்: சத்துருபீடை. தொழில் நஷ்டம், புத்திதடு மாற்றம்.

இடபம்: காரிய அனுகூலம், புத்திரர் பெருமை, பணவரவு.

மிதுனம்: இனசன மதிப்பு போசனசுகம், அதிகார விருத்தி.

கடகம்: தேகபீடை, குடும்ப மனஸ்தாபம், காரியத் தடை.

சிங்கம்: உறவில் விரிசல், வாக்குப்பகை, கடும் சினம்.

கன்னி: அன்னியர் சகாயம், வித்தை விருத்தி, தியாகம்.

துலாம்: மனச்சந்தோஷம், சகோதரி உதவி, நட்பு

விருச்சிகம்: பெரியோர்பகை, பணமுடை, வைத்தியசெலவு.

தனுசு: வீட்டில் துன்பம், அதிகயோசனை, அலைச்சல்.

மகரம்: சுபகாரியம், சமா தான முயற்சி, வீண்விரயம்.

கும்பம்: தப்பபிப்பிராயம், தொழில்பகை, கெட்டகனவு

மீனம்: உற்சாகம், தொழில் வரவு, குடும்பசுகம்.

— ஜோஸ்யர்

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

திருவள்ளுவர் ச. ச. நிலையத் தின் ஆதரவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப்போட்டிக ளின் விபரம் வருமாறு:

முதலாட்டத்தில் நாவாந் துறை சென். நீக்கிலஸ் கழக மும், கலைவாணி கழகமும் மோதும். 2-வது ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், அரியாலை கழகமும் மோதும். (வி)

## சிகிச்சைப் பிரிவு இடமாற்றம்

(உடுவில்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வந்த சில வைத்திய சிகிச்சை பிரிவுகள் தற்போது கந்த ரோடை உப தபாலகத்துக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வாசிகசாலைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு திங்கட்கிழமை களிலும் வைத்திய கிளினிக் (மெடிக்கல் கிளினிக்) கும், புதன்கிழமைகளில் சிறுபிள்ளை களுக்கான வைத்தியமும்சனிக் கிழமைகளில் நீரிழிவு நோயா ளிகளுக்கான வைத்தியமும் மேற்படி நிலையத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. [09-அ]

## மீண்டும் இன்று சந்திக்கின்றோம்!

உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. ஆனால் ஒரு சிக்கல்.

இடமின்மை காரணத்தால் சில குறிப்பைத் தந்துவிட்டு நாளை கண்டிப்பாக.

உங்களுக்கு சொல்கின்றோம்

**தமிழீழத்தில் முதற்தடவையாக.. காற்றூட்டப்பட்ட...**

சற்று சீர்தூக்கி பாருங்கள்.
மிகுதி நாளை.

விளம்பர அமைப்பு
செனித் ஜோ எக்...

(சி- 6684)

# "போரை தொடர்ந்து நடத்த அரசு ஒத்துழைப்பு வழங்கும்"

## படையினர் மத்தியில் ரணில் உரை

[கொழும்பு]

"வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதற்கு புதிய இராணுவ தளபதிகளுக்கு அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும்" என்று கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அங்கு படையினர் மத்தியில் உரை நிகழ்த்துகையிலே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: காலஞ்சென்ற இராணுவத் தளபதிகளான லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண ஆகியோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா, பிரிகேடியர் ஹேகான் தலுவத்த ஆகியோருக்கு சகல ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அங்கே பேசுகையில்: யுத்த காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஆற்றல், உறுதி உபாயங்கள் பற்றியும் காலஞ்சென்ற லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண உட்பட ஒன்பது படை அதிகாரிகளின் உன்னத ஆற்றல் பற்றியும் விளக்கினர்

புதிய தளபதிகள் இருவரும் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு தமது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்துவார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். (ரி)

---

## அருள் நல்லைக் கந்தவேளே

நிலையாத உலகினில் மலையாத பொருளும்நீ
நினைப்பவர்க்கருள் செய்வாய்நீ
நித்தமும் வழிபடும அடியவர் இடரெல்லாம்
நீறுபடவே அருளுவாய்
ஆறுமுக அழகா அருள்பொழியும் கண்ணழகா
அடியவர் குறைதீர அருள்புரி வேலழகா
ஏறுமயில் ஏறிவந்தெம்மை காத்திடுவாய்
எல்லோரும் வாழ்வுபெற அருள் ஈந்திடுவாய்.

திருமதி காவேரி யோகநாதன்.

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 15-ம் திருவிழா)

---

## சுவிஸ் அகதிகள் பலவந்தமாக இலங்கைக்கு அனுப்பப்படமாட்டார்கள்

(கொழும்பு)

சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்று சுவிஸ் தூதரகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சொந்த விருப்பத்தின் பேரிலேயே இவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் இவர்கள் நாடு திரும்பும்பணி அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸில் முப்பதினாயிரம் இலங்கையர்கள் தஞ்சமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

---

## நாடகப் பயிற்சி பட்டறை

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினர் வடமராட்சியில் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் புதிய கலைஞர்களைத் தோற்றுவிக்கும் முகமாகவும் நடாத்தப்படவுள்ள மேற்படி நாடக பயிற்சிப் பட்டறையில் நாடகத்துறையில் ஆர்வம்கொண்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம் என்றும் சிறந்த பயிற்சியாளர்கள் நெறியாளர்கள் ஒப்பனையாளர்களைக் கொண்டு நடாத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள உள்ள ஆண்பெண் இருபாலரும் இம்மாதம் 25ந் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், வடமராட்சி வதிரி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

---

## வீரப்பனைப் பிடிப்பதற்கு இராணுவ உதவிகோரப்படும்

(பெங்களூர்)

சந்தனக் கடத்தல் காரன் வீரப்பனைப் பிடிப்பதற்கு மத்திய அரசிடம் இராணுவ உதவி கோரப்படும் என்று கர்நாடக முதல்வர் எஸ். பங்காரப்பா தெரிவித்தார்.

வீரப்பன் கூட்டத்தினரின் அடாவடித்தனங்கள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன. பொலிசார் உட்பட 15பேர் இதுவரையும் வீரப்பனால் கொலைலப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வீரப்பனை தேடும் நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு கர்நாடக அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் அவர் மேலும் கூறினர். [ரி]

---

## யாழ். சாரணர் ஜம்போறி பயணம் பிற்போடப்பட்டது

(திருநெல்வேலி)

4வது தேசிய ஜம்போறி விழாவிற்கு செல்லவிருந்த யாழ். மாவட்ட சாரணர் குழுவின் பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சாரணளர் சங்க கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்பட்டபோது பாதுகாப்பு உறுதிப்படுத்கப்படாமையும், தென்பகுதியில் பதற்றம் காணப்படுவதும் காரணமாக

[4-ம் பக்கம் பார்க்க]

---

## கனத்தை வன்செயலில் சுதந்திரகட்சி ஈடுபாடு குறித்து விசாரணை செய்யவேண்டும்

(கொழும்பு)

கனத்தை மயானத்தில் கடந்தவாரம் காலஞ்சென்ற படை அதிகாரிகளின் இறுதிக் கிரியைகளின்போது இடம்பெற்ற வன்செயல்களில் சுதந்திரக் கட்சி ஈடுபட்டுள்ளது குறித்த புகார் தொடர்பாக கட்சித் தலைமைப்பீடம் விசாரணை செய்யவேண்டுமென்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் சிலர் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவரும் விசாரணை செய்யப்பட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்படவேண்டும் எஸ்றும் அவர்கள் கேட்டுள்ளனர். (ரி)

---

## தற்காலிக எழுதுநர் சேவையில் இடம் கிடைக்காதோர் அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக எழுதுநர் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு, இதுவரையும் நியமனம் கிடைக்காதபலர், யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

149 பேர் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 304 பேரில், 155 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டதாகவும், தங்களுக்கு நியமனம் வழங்க மறுப்பது மனித உரிமைகளை மீறிய செயலென்றும், யாழ். மாவட்டத்தின் அரச திணைக்களங்களில் பதவி வெற்றிடங்கள் இருப்பதாகத் தாங்கள் அறிந்துள்ளதால், அவற்றுக்குத் தங்களை நியமிக்குமாறும் அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

தாம் ஏற்கனவே மேற்படி பரீட்சைக்குத் தோற்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கும்போது, மீண்டும் எழுதுநர் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோருவது நியாயமற்றது என்றும் அவர்கள் அம்மகஜரில் மேலும் தெரிவித்துள்ளனர். (கே-க)

---

## லண்டனில் அஞ்சலி

(லண்டன்)

அராலிச் சந்தியில் புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் லண்டனில நடைபெற்றது.

லண்டனிலுள்ள சர்வதேச பௌத்த நிலையத்தில் இவ் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. [ரி]

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பொதுசன நூலக அபிவிருத்தி

யாழ். மாநகர நூலகத்தின் நூல் வளத்தைக் கணிசமான அளவு அதிகரிக்கும் பொருட்டு, போதிய அளவு நூல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் சிபார்சு செய்யும் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மாநகர எல்லைக்குள்ளும் அப்பாலும் வதியும் அறிஞர்கள் கல்விமான்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத்தாபனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்தும் நூலக வாசகர்களிடமிருந்தும் அவர்கள் விரும்பும் நூல்கள் தொடர்பான பூரண விபரங்களை (புத்தகத்தின் பெயர், எழுதியவர் பெயர், பிரசுரிப்பாளர்) உள்ளடக்கிய பட்டியல்களை 20 - 08 - 92 வியாழக்கிழமைக்கு முன்பதாக எனக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-08-1992. (சி-2367)

---

## சிறுகதை தொகுதி வெளியிடமுடிவு

(யாழ்ப்பாணம்)

சமகாலப் போராட்ட இலக்கியங்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் முகமாகவும், புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் முகமாகவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிக் கோட்டத்தினர் சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

இச்சிறுகதைத் தொகுதிக்கான ஆக்கங்கள் வடமராட்சியிலுள்ள சிறுகதை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

சமகால நிகழ்வுகளை கருப்பொருளாகக் கொண்டு எழுதப்படும் சிறுகதைகளை இம்மாதம் 25ந் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், வடமராட்சி, வதிரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென வேண்டப்படுகிறது. (அ)

---

## 25-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா ஆறுமுகம்

மலர்வு: 1918 உதிர்வு: 1967

திதி: 03 - 08 - 1992

அன்பின் இருப்பிடமே
பண்பின் உறைவிடமே
பாசத்தின் ஒளிவிளக்கே
குடும்பத்தின் தலைவனே
தெய்வத்தின் காவலனே
நண்பரின் சின் அண்ணனே
உறவினரின் சேவகனே
தொழிலாளரின் முதலாளியே
யாவர்க்கும் இனியவனே
விண்ணுலகம் சென்றுவிட்டாயே
மண்ணுலகில் காண்பதெப்போ?

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
86, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-6676)

# இந்தியாவில் வேலை வாய்ப்பின்றி

# ஒன்பது கோடி இளைஞர் பாதிப்பு!

## வறுமை நிலையில் கோடிக்கணக்கான மக்கள் அவதி!!

(புதுடில்லி)

இந்தியாவில் ஒன்பதுகோடி இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதாக வெரித்தாஸ் வானொலி தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டது.

அவ்விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தியா சுதந்திரம்பெற்று 45 ஆண்டுகள் நிறைவெய்தியுள்ளபோதிலும்கோடிக்கணக்கான மக்களின் வறுமை, ஏழ்மை நிலை பெருகிக் கொண்டே போகிறது.

உணவு, உடை, இருப்பிடம் படிப்பறிவு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாதோரின் தொகையும் இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் ஊழல், லஞ்சம் மோசடி போன்ற செயல்கள் பெருகி வருவதனுல் மொத்தத்தில் சமூக, பொருளாதார, அரசியல், சமய சீரழிவுகளை காணமுடிகிறது என்றும்அந்த செய்தி விமர்சனத்தில குறிப்பிடப்பட்டது. (கே-ரி)

# எய்ட்ஸ் பரிசோதனையில் விஞ்ஞானிகள் வெற்றி

[நியூயோர்க்]

எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் எச். ஐ வி. வைரஸ்களை செயலிழகக்ச்செய்யும்எதிர்ப்பு உயிர்களை உருவாக்குவதில விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளதாக அமெரிக்க சஞ்சிகை ஒன்று தகவல் வெளியட்டுள்ளது.

'எய்ட்ஸ்' தடுப்பு பரிசோதனை நாய்களிமீது பரிசோதிக்கப்பட்டதாகவும் இம் முயற்சியில் விஞ்ஞானிகள் வெகுதூரம் முன்னேறிவிட்டதாகவும் அச்சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. (க)

# ஒய்வுபெற்ற வைத்தியர்கள் மீண்டும் சேவையில்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் பற்றுக்குறை நிலவுவதை அடுத்து ஒய்வுபெற்ற வைத்தியர்களைசேவையில் ஈடுபடுத்த சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை. திருமலை ஆகியபகுதிகளிலேயே ஒய்வுபெற்ற வைத்தியர்கள் நியமிக்கப்பள்வுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதால் இடமாற்றம் பெறும் வைத்தியர்கள்கூட இப்பகுதிகளுக்கு செல்ல தயக்கம் காட்டி வருவதாகவும் சுகாதார அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது. (இ-க)

## தீவகப்பகுதி மக்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இதுவரை புதிய உலர் உணவு அட்டைகளைப் பெற்ற தீவக மக்கள் தங்களுடைய ஆவணி மாதத்திற்கான உலர் உணவைப் பெறுவதற்குத் தங்களுடைய நிரந்தர கிராம அலுவலர்களிடம் உலர்உணவு அட்டைகளை ஒப்படைக்குமாறு கேட்சட்படுகிறார்கள். பட்டியல் தயாரித்து சம்பந்தப்பட்ட பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்துச்கு இவ் அட்டைகள் அனுப்பிவைக்கப் படும்,

இதுவரை புதிய உலர் உணவு அட்டையைப் பெறுதவர்கள் தங்களுககுரிய குடும்பப் பதிவு அட்டையுடன் வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொளளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (வி-ரி)

### யாழ். சாரணர்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பயணம் பிற்போடப்படுவதாக மாவட்ட ஆணையாளர் தெரிவித்தார்.

4வது தேசிய ஜம்போரி குருணாகலையில் நேற்று 16ம் திகதி ஆரம்பமாகி 21ம் திகதிவரை விழா நடைபெறவுள்ளது. (157)

### மட்டு. உரக்களஞ்சியம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. விவசாயப் பிரதேசமான மட்டக்களப்பு உரக்களஞ்சியம் மூடப்பட்டுள்ளதால வேளாண்மைச் செய்கை மேலும் பாதிக்கப்படுமென்று விவசாய அமைப்புக்கள் அச்சம் தெரிவித்துள்ளன. (71-ரி)

### வடக்கு கிழக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீ லங்கா அரசு மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகள் உடன் நிறுத்தப் படவேண்டும். இந்த யுத்தம் தொடர்வதினால் பாதுகாப்புக்கான செலவினங்கள் பெருமளவில் அதிகரித்து வருகின்றன.

இன்று வாழ்க்கைச் செலவின் உயர்வினுல் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நாட்டு மக்கள் பட்டினி கிடக்கவே நேரிடும்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாசக்கட்சி கொம்யூனிஸ்ட்கட்சி, நவசமசமாஜக கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகளே இவ்வாறு தெரிவித்துள்ளன.

இதனிடையே பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அரச ஒருவர் அதிகாரிசெய்திகளிடம் பேசுகையில், சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் அரசியல் நோக்குடைய ஜனசவிய, பாடசாலைப்பிள்ளைகளுக்கு இலவச சீருடை வழங்கல் போன்ற திட்டங்களுக்கு தேவைப்படும் 400 கோடி ருபாவரையிலான நிதியை எங்கிருந்து பெறுவதெனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளுக்கு ஒதுக்குவதாகஸ்ரீலங்கா அரசு உறுதி அளித்திருந்த 6 கோடியே 60 லட்சம் இன்னமும் ஒதுக்கப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-சு)

## ஆப்கான் பிரதமர் பதவி நீக்கம்?

(இஸ்லாமாபாத்)

ஆப்கான் பிரதமமந்திரி அப்துல் சதுன் டரீதை அந்த நாட்டு அதிபர் றபானி விலக்கிவிட்டதாக இஸ்லாமாபாத்திலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஆனுல் இதுவிடயமாக ஆப்கானிலிருந்து உத்தியோகபூர்வமான அறிவிததல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. (கே)

### படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடி அகதி முகாமில் தங்கியிருப்பவரான இளையான் மூர்த்தி (18வயது) என்ற இளைஞரே இந்நிலைக்கு ஆளாகியவராவர். (இ-56)

### அராலி சம்பவம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் ஒன்பது அதிகாரிகளும் பயணம்செய்த 4 தொன் நிறையுடைய லாண்ட்ரோவர் எவ்வாறு வெடித்தது என்ற சந்தேகம் இராணுவ உயர் மட்டத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேற்படி பாதையில் தென்னிலங்கையில் இருந்து வந்த அமைச்சர்களின் வாகனங்கள் பத்திரிகையாளர்களின் வாகனங்கள் இந்த பாதையின் ஊடாகச் சென்றுள்ளது. அப்போது அவை வெடிககவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடவிரும்பாத அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு செலவினம் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டதிலும் பார்க்க 400 கோடி ரூபாவரையில் அதிகரித்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினுர். (இ-ரி)

### அரசு சர்வாதிகார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பது இராணுவ அதிகாரிகளின் மரணத்தையடுத்து திரு. பிரேமதாஸாவின் செல்வாக்கு தென்பகுதி அரசியலில் குறைந்து வருகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசின் தவருன அணுகுமுறையினுல் இந்த அதிகாரிகள் மரணம் நிகழ்ந்துள்ளதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ரி)

### மட்டுப்படுத்தப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய்க்கிழமை தலைமையக பேச்சாளரை சந்தித்த செய்தியாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் எங்கே மேற்கொள்ளப் பட்டுவருகின்றன என்று கேட்டபோது, அதுபற்றி தகவல் வெளியிட அவர் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை அராலிச் சந்தியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் மூத்த இராணுவ அதிகாரிகள் கொலைப் பட்ட சம்பவததுக்குப் பிறகு ஸ்ரீலங்கா இராணுவம், பல தாக்குதலை நடாத்தின. (இ-சு)

# 11 ஆயிரம் ஆசிரியர்கள் இவ்வருடம் நியமிப்பு

[கொழும்பு]

இந்த வருட முடிவிற்குள் மேலும் 11 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இத்தகவலை கல்விச் சேவைகள் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 2500 ஆங்கில ஆசிரியர்களும் நியமிக்கப்படுவர். ஏற்கனவே 200 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்படும்.

ஆசிரியர் பற்றுக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு இவர்களில் அதிகமானேர் நியமிக்கப்படுவர். (கே)

## மைலந்தனை படுகொலை குறித்து சிறில் ரணதுங்கா இன்று ஆராய்வார்

(கொழும்பு)

மட்டு. மைலந்தனை கிராமத்தில் அண்மையில் நடந்த தமிழர் படுகொலை தொடர்பாக அரசு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தலைமையில்இன்று ஆராயவுள்ளது.

இப்படுகொலைதொடர்பான விபரங்களைப் பெறுவதற்காக ஜெனரல் சிறில் ரணதுங்கா இன்று பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளார். [இ-ரி]

# கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகள் இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பல பகுதிகளில் புனர்வாழ்வுப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனுல்அப்பகுதியில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு காந்தி சேவா சங்கம் கூறியுள்ளது,

கிழக்கிலங்கையில் புனர்வாழ்வுக் சழகத்தலைவரான திருகோணமலை, மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தி சேவா சங்கம் இக்கருத்தை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறைவிடங்களையும், பொருள் உடைமைகளையும் இழந்து வாழும் மக்களுக்கு காலம்தாழ்த்தாது புனர்வாழ்வு அளிப்பது முக்கியமானதாகும். இம்மாவட்டங்களில் சகல பகுதி மக்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப் படவேண்டும் எனவும் காந்தி சேவா சங்கம் மேலும் கேட்டுள்ளது. (சு)

## தமிழ் அகதிகளை வெளிநாட்டுஉயர்ஸ்தானிகர் சந்தித்தனர்

(மன்னார்)

தமிழ் மக்கள் அகதிகளாக தங்கியுள்ள மன்னார் தீவுக்கு வெளிநாட்டு உயர் ஸ்தானிகர்களும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்களும் அண்மையில் இரண்டாவது தடவையாக விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

மன்னார்த்தீவில் இவர்கள் அகதி முகாம்களுக்கு சென்று தமிழ் மக்களை சந்திததனர். தமிழ மக்கள் தமது நிலைமைகளை அவர்களிடம் தெளிவாக விளக்கினர்.

மன்னார் தீவின் பல இடங்கள் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்பட்டு இருந்தபோதிலும் தமது வீடுகள் சூறையாடப்பட்டுள்ளதினுலும் தமது சொந்தஇடங்களுக்குச் சென்று குடியமர முடியாத நிலையில் முகாம்களில் முடங்கிக் கிடைக்கும் நிலையில் உள்ளதாகவும் உயர்ஸ்தானிகர்களிடம் தமிழ் மக்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளதாக தெரிய வருகின்றது.

ஸ்ரீலங்கா அரசினுல் மாதாமாதம் வழங்கி வரும் உலர் உணவு பொருட்களினுல் உணவு விடயத்தை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருக்கின்றது ஆனுல் ஏனைய செலவுகளுக்கு மிகவும் கஷ்டப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியமரும் சூழ்நிலையை ஏற்படுத்திததருமாறும், அவர்கள் மாதா மாதம் செலவுகளுக்காக ஒரு சிறு தொகை பணத்தை தந்து உதவுமாறும் தமிழ் மக்கள் வெளிநாட்டு மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகர்கள குழுவினரிடம் விண்ணப்பித்துக் கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

### அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்தனர்.

பலாலி இராணுவ முகாம் சென்ற அமைச்சரையும் தளபதியையும் வடமாகாணத்தின் புதிய தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா யாழ் பிராந்திய தளபதி பிரிகேடியர் ஞேசான் தலுவத்த ஆசியோர் வரவேற்றனர். (இ-ரி)

### கொப்பேகடுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பவத்தை கேள்விப்பட்டதும் கொழும்பு மாநகரில் கடைகள் மூடப்பட்டன. அப்போது கொலைஞர் படைகள் என்று கூறிக்கொண்ட சிலர் கடைகளுள் வந்து சோகத்தில் மூழ்கி பிரயோசனமில்லை. கடைகளை திறவுங்கள். இது சாதாரண மரணங்கள் இராணுவத்திற்கு இது வழமையாக நடக்கும் என்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

[புலோலி]

ஆழியவளை இ. சி. த. க. பாடசாலைக்கு ஒரு தொகுதி தளபாடங்களையும் உபகரணங்களையும் வழங்குவதற்கு வடமராட்சி போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது.

500 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் நூறுமாணவர்களுக்கு மட்டும் தேவையான தளபாடங்கள் இருப்பதையும் ஏனைய மாணவர்களுக்கு போதிய தளபாடமின்மையால் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வருவதையும் ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை நிர்வாகம் வடமராட்சி போரூட் நிறுவனத்திடம் சுட்டிக்காட்டியதையடுத்து இப்பாடசாலைக்கென ஒரு தொகுதி தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப் படவுள்ளன, [61-அ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 86இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number P/10336/8